Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **ராமமூர்த்தி (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**22.05.2026**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 23.11.2024 ம் தேதி நான் ரெட்டியபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது நானும், தலைமை காவலர் கதிர்வேல் மற்றும் முதல் நிலை காவலர் ரதிவேல் ஆகியோர்கள் ம.ரெட்டியபட்டி காவல் நிலைய சரக பகுதிகளில் மது விலக்கு, சூதாட்டம் தடுப்பு சம்மந்தமாக ரோந்து பணியில் இருந்தபோது மாலை 05.00 மணிக்கு மறவர்பெருங்குடி – சுத்தமடம் சாலையில் சந்தனமாரியம்மன் கோவில் அருகே சென்ற போது சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்தவரை விசாரித்துபோது பெயர் முத்துராமலிங்கம் என்று கூறியவர் வைத்திருந்த பிக் பாஸ் என்ற எழுதப்பட்ட வெள்ளை மஞ்சள் கருப்பு கலர் கலந்த பாலீதீன் பையில் 180 மிலி அளவுடன் கூடிய Monitor Deluxe Brandy –12, Express Special Brandy –14 பாட்டில்களும் மொத்தம் 26 பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி பாட்டில்களை எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லாமல் விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி நபரை அந்த இடத்திலேயே கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், மேற்படி

மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்ற அங்கிருந்த தனி நபர்கள் யாரும் முன்வராததால் என்னுடன் ரோந்து பணிக்கு வந்த காவலர்கள் தலைமை காவலர் கதிர்வேல், முநிகா ரதிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் இரவு 06.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி முத்துராமலிங்கம், மீது நிலைய குற்ற எண். 138/2024 பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **( முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்து எதிரி அன்றைய தினமே தக்க பிணையதாரர்களை ஆஜர் செய்ததால் நிலைய பிணையில் விடுவித்தேன். அன்றைய தினம் என்னுடன் ரோந்து பணிக்கு வந்த தலைமை காவலர் கதிர்வேல், முநிகா ரதிவேல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் இராமேஸ்வரன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் என்றால் சரிதான். சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்து சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

2. சொன்னவாறு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடம் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணைக்காக நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2026** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **கதிர்வேல் ( தலைமை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**22.05.2026**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது கீழபரளச்சி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 23.11.2024 ம் தேதி நான் ரெட்டியபட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி அவர்களுடன், நான் மற்றும் முதல் நிலை காவலர் ரதிவேல் ஆகியோர்கள் ம.ரெட்டியபட்டி காவல் நிலைய சரக பகுதிகளில் மது விலக்கு, சூதாட்டம் தடுப்பு சம்மந்தமாக ரோந்து பணியில் இருந்தபோது மாலை 05.00 மணிக்கு மறவர்பெருங்குடி – சுத்தமடம் சாலையில் சந்தனமாரியம்மன் கோவில் அருகே சென்ற போது சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்தவரை விசாரித்துபோது பெயர் முத்துராமலிங்கம் என்று கூறியவர் வைத்திருந்த பிக் பாஸ் என்ற எழுதப்பட்ட வெள்ளை மஞ்சள் கருப்பு கலர் கலந்த பாலீதீன் பையில் 180 மிலி அளவுடன் கூடிய Monitor Deluxe Brandy –12, Express Special Brandy –14 பாட்டில்களும் மொத்தம் 26 பாட்டில்கள் இருந்தன். எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லாமல் மதுபாட்டில்களை விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி

நபரை அந்த இடத்திலேயே சிறப்பு சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், மேற்படி மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்ற அங்கிருந்த தனி நபர்கள் யாரும் முன்வராததால் ரோந்து பணிக்கு சென்ற எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதில் நானும், முநிகா ரதிவேலும் சாட்சி கையெழுத்துக்கள் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **(அத்தாட்சி அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் இரவு 06.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி முத்துராமலிங்கம், த/பெ. சக்திவேல் என்பவருக்கு எதிராக நிலைய குற்ற எண். 138/2024 பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**